பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்
13 JAN 2020
சென்னை-5
சேப்பாக்கம்

சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – அறிவிப்புகள் – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு – கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியா பயன்பெறும் வகையில் 6 கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை

அரசாணை (நிலை) எண்.04 நாள் 06.01.2020

விகாரி, மார்கழி 21
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது :

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.சி1/5281/2019,
நாள் 4.10.2019.

* * * * * * * *

ஆணை:

20.07.2019 அன்று நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2019–2020–ஆம் ஆண்டில் 2 பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள், 2 மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் விடுதிகள் மற்றும் 2 சிறுபான்மையினர் விடுதிகள் என மொத்தம் 6 கல்லூரி விடுதிகள், 2 கோடியே 56 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக துவங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காக மொத்தம் 1348 விடுதிகள் இயங்கி வருகின்றன என்றும் ஏழையெளிய மாணவ, மாணவியரின் நலனுக்காகப் புதிய விடுதிகள் துவங்கக்கோரி தொடர்ந்து கோரிக்கைகள் பெறப்பட்டு வருவதால் அக்கோரிக்கைகளின் அடிப்படையில், புதிதாகத் துவங்க உத்தேசிக்கப்பட்ட 6 கல்லூரி விடுதிகளின் பெயர் விவரத்தினை பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண். | மாவட்டம் | விடுதியின் பெயர் |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | | |
| 1 | திருச்சிராப்பள்ளி | தொழிற்பயிற்சி கல்லூரி மாணவியர் விடுதி, புள்ளம்பாடி |
| 2 | ஈரோடு | தொழில்நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, பெருந்துறை |

| | | |
|---|---|---|
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | | |
| 3 | நாகப்பட்டினம் | கல்லூரி மாணவியர் விடுதி, மணல்மேடு, மயிலாடுதுறை |
| 4 | தஞ்சாவூர் | இசைக் கல்லூரி மாணவர் விடுதி, திருவையாறு |
| சிறுபான்மையினர் நல விடுதிகள் | | |
| 5 | கடலூர் | கல்லூரி மாணவியர் விடுதி, சி.முட்லூர் |
| 6 | சிவகங்கை | கல்லூரி மாணவியர் விடுதி, பூலாங்குறிச்சி, திருப்பத்தூர் ஒன்றியம். |

3. மேற்காணும் 6 புதிய கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளை 100 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட விடுதிகளாக துவங்கி செயல்படுத்திட ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்ட பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியம் என்பதால் இப்பணியிடங்களை தோற்றுவிக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் வேண்டியுள்ளார்.

| வ. எண். | பதவி விவரம் | ஊதிய விகிதம் | தலா ஒரு விடுதிக்கான பணியிடங்கள் எண்ணிக்கை | ஆறு விடுதிகளுக்கான பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பி.எட்., பட்டதாரி போதகக் காப்பாளர்/ காப்பாளினி | ரூ.36,400–1,15,700 | 1 | 6 |
| 2 | சமையலர் மற்றும் உதவி சமையலர் | ரூ.15,700–50,000 | 2 | 12 |
| 3 | காவலர்/ ஏவலர் | ரூ.15,700–50,000 | 1 | 6 |
| 4 | துப்புரவு பணியாளர் | (மாதம் ரூ.3,000/– தொகுப்பு ஊதியத்தில்) | 1 | 6 |

4. மேற்குறிப்பிடப்பட்ட 6 புதிய கல்லூரி விடுதிகள் துவங்குவதற்கான தொடரும் செலவினம் ரூ.2,32,21,944/– மற்றும் தொடரா செலவினம் ரூ.24,88,300/– ஆக மொத்தம் ரூ.2,57,10,244/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கோரியுள்ளார்.

5. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, 100 மாணவ/மாணவியர் தங்கும் வகையில் 6 கல்லூரி மாணவ, மாணவியருக்கான விடுதிகளை (2 பிற்படுத்தப்பட்டோர் + 2 மிகப்பிற்படுத்தப்பட்டோர் + 2 சிறுபான்மையினர்) மேலே பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் புதிதாக துவங்கிடவும், இவ்விடுதிகளை துவக்குவதால் ஆண்டொன்றிற்கு தேவைப்படும் தொடர்

செலவினம் ரூ.2,32,21,944/–மற்றும் தொடரா செலவினம் ரூ.24,88,300/– என சேர்த்து மொத்த செலவினம் ரூ.2,57,10,244/–க்கு (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்தேழு இலட்சத்து பத்தாயிரத்து இருநூற்று நாற்பத்து நான்கு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. தொடர் மற்றும் தொடரா செலவினங்கள் முறையே இணைப்பு I மற்றும் II–ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. மேலே பத்தி 5–ல் புதிதாக துவங்க ஆணையிடப்பட்டுள்ள 6 (2 பிற்படுத்தப்பட்டோர் + 2 மிகப்பிற்படுத்தப்பட்டோர் + 2 சிறுபான்மையினர்) கல்லூரி விடுதிகளுக்கு, ஒரு விடுதிக்கு தலா ஒரு காப்பாளர்/காப்பாளினி, 1 சமையலர் மற்றும் 1 உதவி சமையலர் மற்றும் ஒரு காவலர்/ஏவலர் என 6 விடுதிகளுக்கு மொத்தம் 6 பி.எட்., பட்டதாரி போதகக் காப்பாளர்/காப்பாளினி பணியிடங்கள், ரூ.36,400–ரூ.1,15,700 (நிலை 16) என்ற காலமுறை ஊதிய விகிதத்திலும், 6 சமையலர் மற்றும் 6 உதவி சமையலர் பணியிடங்கள் ரூ.15,700–ரூ.50,000 (நிலை 1) என்ற காலமுறை ஊதிய விகிதத்திலும், 6 காவலர் மற்றும் ஏவலர் பணியிடங்கள் ரூ.15,700 – ரூ.50,000 (நிலை 1) என்ற காலமுறை ஊதிய விகிதத்திலும் தற்காலிகமாக தோற்றுவித்தும் மற்றும் ஒரு விடுதிக்கு தலா ஒரு துப்புரவு பணியாளர் வீதம் 6 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை மாதம் ஒன்றுக்கு தலா ரூ.3,000/– வீதம் தொகுப்பூதியத்தில் தோற்றுவிக்க ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

7. மேற்காணும் பணியிடங்களில் பணியமர்த்தப்படும் பணியாளர்கள் அவர்கள் நியமன நாள் முதல் சம்பளம் மற்றும் இதர படிகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் இணைப்பு I மற்றும் II-இல் உள்ளவாறு பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்–2 கல்லூரி விடுதிகள் ( ரூ.85,61,748 /– )</u>

2225–ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277– கல்வி – மாநிலச் செலவினங்கள்–AA–பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்.
(த.தொ.கு 2225–03–277–AA–30000)

<u>மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் –2 கல்லூரி விடுதிகள் (ரூ.85,61,748/– )</u>

2225–ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் –03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –277– கல்வி – மாநிலச் செலவினங்கள்–BC–மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்
(த.தொ.கு 2225–03–277– BC –30000)

<u>சிறுபான்மையினர் நல விடுதிகள் – 2 கல்லூரி விடுதிகள் (ரூ.85,86,748/–)</u>

2225–ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 04 – சிறுபான்மையினர் நலன் –277– கல்வி – மாநிலச் செலவினங்கள்–JB–சிறுபான்மையினர் மாணவர் இல்லங்கள்
(த.தொ.கு 2225–04–277– JB –30000)

9. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுத் துணைப்பணி" (New Instrument Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல்

பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொ–I) துறையில் தனியாகப் பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின விதிகள் 1963–இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கு உரிய கருத்துருவையும் 2019–2020–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (பி.மி.பி (ம) சி.ந/வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. மேற்காணும் 6 புதிய கல்லூரி விடுதிகளும் முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.61562/நிதி (பி,மிபி(ம)சி.ந)/2019, நாள் 03.01.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2697 (Two thousand six hundred and ninety seven)

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை– 5.
இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை– 5.
இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர், (தணிக்கை–2), சென்னை–18. (பெயரில்).
சம்பளக்கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை –5.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

**நகல் :**
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.

மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலன்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை--9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3 மற்றும் சிந)த்துறை, சென்னை--9.
நிதி (பி.மி.பி./வ.செ.பொது I & II)த் துறை, சென்னை--9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

வா.அதா 6/1/2020
பிரிவு அலுவலர்
06/01/2020

## இணைப்பு-1

**அரசாணை (நிலை) எண்.04, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 06.01.2020-ன்படி புதிதாக துவங்க ஆணையிடப்பட்ட 6 கல்லூரி விடுதிகளின் (2 பிற்படுத்தப்பட்டோர், 2 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 2 சிறுபான்மையினர்) தொடர் செலவினம்**

| வ. எண் | பதவி மற்றும் குறைந்தபட்ச ஊதியம் | கணக்கு தலைப்பு (DPC) பிற்படுத்தப்பட்டோர் நலன் | தொகை (ரூ.) | கணக்கு தலைப்பு (DPC) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன் | தொகை (ரூ.) | கணக்கு தலைப்பு (DPC) சிறுபான்மையினர் நலன் | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஒரு பி.எட்., பட்டதாரி போதகக் காப்பாளர் / காப்பாளினி பணியிடம் [ரூ.36,400/- (நிலை-16, ரூ.36,400 - 1,15,700)] என்ற ஊதிய ஏற்ற முறை (ரூ. 88676 x 12) | IFHRMS 2225-03-277-AA- 30100 (old 2225-03-277-AA- 0105) | 1064112 | IFHRMS 2225-03-277-BC- 30100 (old 2225-03-277-BC- 0100) | 1064112 | IFHRMS 2225-04-277-JB- 30100 (old 2225-04-277-JB- 0104) | 1064112 |
| 2 | இரு சமையலர் பணியிடம் [ரூ.15,700/- (நிலை-1, ரூ.15,700 - 50,000)] என்ற ஊதிய ஏற்ற முறை) (ரூ. 38792 x 2 x 12) | | 931008 | | 931008 | | 931008 |
| 3 | ஒரு காவலர் மற்றும் ஏவலர் பணியிடம் [ரூ.15,700/- (நிலை-1, ரூ.15,700 - 50,000)] என்ற ஊதிய ஏற்ற முறை) (ரூ. 38792 x 12) | | 465504 | | 465504 | | 465504 |
| 4 | ஒரு துப்புரவு பணியாளர் (மாதம் ரூ.3000/- தொகுப்பூதியம்) (ரூ. 3000 x 12) | IFHRMS 2225-03-277-AA- 33304 (old 2225-03-277-AA- 3344) | 36000 | IFHRMS 2225-03-277-BC- 33304 (old 2225-03-277-BC- 3349) | 36000 | IFHRMS 2225-04-277-JB- 33304 (old 2225-04-277-JB- 3343) | 36000 |
| 5 | விடுதி வாடகை (ரூ. 20000 x 12) | IFHRMS 2225-03-277-AA- 30601 (old 2225-03-277-AA- 0614) | 240000 | IFHRMS 2225-03-277-BC-30601 (old 2225-03-277-BC-0619) | 240000 | IFHRMS 2225-04-277-JB-30601 (old 2225-04-277-JB-0613) | 240000 |
| 6 | குறித்த கால பராமரிப்பு செலவினம் | IFHRMS 2225-03-277-AA- 31801 (old 2225-03-277-AA-1819) | 15000 | IFHRMS 2225-03-277-BC- 31801 (old 2225-03-277-BC- 1814) | 15000 | IFHRMS 2225-04-277-JB- 31801 (old 2225-04-277-JB- 1818) | 15000 |

| வ. எண் | பதவி மற்றும் குறைந்தபட்ச ஊதியம் | கணக்கு தலைப்பு (DPC) பிற்படுத்தப்பட்டோர் நலன் | தொகை (ரூ.) | கணக்கு தலைப்பு (DPC) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன் | தொகை (ரூ.) | கணக்குதலைப்பு (DPC) சிறுபான்மையினர் நலன் | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | செய்தித்தாள் (ரூ. 270 x 10 மாதங்கள்) | IFHRMS 2225-03-277-AA- 33401 | 2700 | IFHRMS 2225-03-277-BC- 33401 | 2700 | IFHRMS 2225-04-277-JB- 33401 | 2700 |
| 8 | ஏனைய இனங்கள் | (old 2225-03-277-AA- 3415) | 1000 | (old 2225-03-277-BC- 3410) | 1000 | (old 2225-04-277-JB- 3414) | 1000 |
| 9 | சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் (ரூ. 75 x 10 மாதங்கள் x 100 மாணவர்கள்) | IFHRMS 2225-03-277-AA- 32401 (old 2225-03-277-AA-2416) | 75000 | IFHRMS 2225-03-277-BC- 32401 (old 2225-03-277-BC- 2411) | 75000 | IFHRMS 2225-04-277-JB- 32401 (old 2225-04-277-JB- 2415) | 75000 |
| 10 | உணவுக் கட்டணம்(100 மாணவர்கள் மற்றும் 2 சமையலர்கள் உள்பட (ரூ. 1000 x 102 x 10 மாதங்கள்) | IFHRMS 2225-03-277-AA- 36709 (old 2225-03-277-AA- 6798) | 1020000 | IFHRMS 2225-03-277-BC- 36709 (old 2225-03-277-BC- 6709) | 1020000 | IFHRMS 2225-04-277-JB- 36709 (old 2225-04-277-JB- 6797) | 1020000 |
| 11 | சிறப்பு உணவு செலவினம் (ரூ. 40 x 5 நாட்கள் x 100 மாணவர்கள்) | | 20000 | | 20000 | | 20000 |
| | மொத்தம் | | **3870324** | | **3870324** | | **3870324** |
| | 2 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளின் மொத்த செலவினம் (1– மாணவர் மற்றும் 1 –மாணவியர்) (ரூ.3870324 x 2 ) | | 7740648 | 2 மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளின் மொத்த செலவினம் (1– மாணவர் மற்றும் 1– மாணவியர்) (ரூ.3870324 x 2 ) | 7740648 | 2 சிறுபான்மையினர் நல விடுதிகளின் மொத்த செலவினம் (2 மாணவியர்) (ரூ.3870324 x 2 ) | 7740648 |
| | புதிதாக துவக்கப்படவுள்ள 6 விடுதிகளின் மொத்த தொடர் செலவினம் (ரூ.3870324 x 6) | | | | | | **23221944** |

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

வா.அஜி
6/1/2020
பிரிவு அலுவலர்

6/1/2020

## இணைப்பு-2

அரசாணை (நிலை) எண்.04, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 06.01.2020–ன்படி புதிதாக துவங்க ஆணையிடப்பட்ட 6 கல்லூரி விடுதிகளின் (2 பிற்படுத்தப்பட்டோர், 2 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் தொடரா செலவின விவரம்

| வ.எ | பொருட்கள் | | கணக்கு தலைப்பு (DPC) பிற்படுத்தப்பட்டோர் நலன் | மாணவர் | மாணவியர் | கணக்கு தலைப்பு (DPC) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன் | மாணவர் | மாணவியர் | கணக்கு தலைப்பு (DPC) சிறுபான்மையினர் நலன் | மாணவியர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மரச்சாமான்கள் (ரூ.40,000) புத்தக அலமாரி (ரூ. 12,000) | | IFHRMS 2225-03-277-AA-30505 | 52000 | 52000 | IFHRMS 2225-03-277-BC-30505 | 52000 | 52000 | IFHRMS 2225-04-277-JB-30505 | 52000 |
| | இயந்திரமும் சாதனமும் | | | | | | | | | |
| 2 | i) | சுகாதார குட்டைத் தகளி | IFHRMS 2225-03-277-AA-31901 | | 25000 | IFHRMS 2225-03-277-BC-31901 | | 25000 | IFHRMS 2225-04-277-JB-31901 | 25000 |
| | ii) | எரிவாயு இணைப்பு | | 50000 | 50000 | | 50000 | 50000 | | 50000 |
| | iii) | அரவை இயந்திரம் | | 25000 | 25000 | | 25000 | 25000 | | 25000 |
| | iv) | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | | 15000 | 15000 | | 15000 | 15000 | | 15000 |
| | v) | இன்வெர்ட்டர் | | 15000 | 15000 | | 15000 | 15000 | | 15000 |
| | vi) | முதலுதவி பெட்டி | | 1250 | 1250 | | 1250 | 1250 | | 1250 |
| | vii) | விளையாட்டுக் கருவிகள் | | 6000 | 6000 | | 6000 | 6000 | | 6000 |
| | viii) | வண்ணத்தொலைக்காட்சிப்பெட்டி (32" LED) | | 30000 | 30000 | | 30000 | 30000 | | 30000 |
| | ix) | பூச்சி அழிப்பான் | | 6000 | 6000 | | 6000 | 6000 | | 6000 |
| | x) | மின் அரைப்பான் | | 6500 | 6500 | | 6500 | 6500 | | 6500 |
| | xi) | இட்லி வேகவைப்பான் | | 13500 | 13500 | | 13500 | 13500 | | 13500 |
| 3 | பாத்திரம் | | IFHRMS 2225-03-277-AA-33401 | 40000 | 40000 | IFHRMS 2225-03-277-BC-33401 | 40000 | 40000 | IFHRMS 2225-04-277-JB-33401 | 40000 |

| வ.எ | பொருட்கள் | | கணக்கு தலைப்பு (DPC) பிற்படுத்தப்பட்டோர் நலன் | மாணவர் | மாணவியர் | கணக்கு தலைப்பு (DPC) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன் | மாணவர் | மாணவியர் | கணக்கு தலைப்பு (DPC) சிறுபான்மையினர் நலன் | மாணவியர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | பொருட்களும் வழங்கலும் | | | | | | | | | |
| | i) | ஜமக்காளம் (100 x ரூ.403) | IFHRMS 2225-03-277-AA-32401 | 40300 | 40300 | IFHRMS 2225-03-277-BC-32401 | 40300 | 40300 | IFHRMS 2225-04-277-JB-32401 | 40300 |
| | ii) | தட்டு மற்றும் டம்ளர் (100 x ரூ.125) | | 12500 | 12500 | | 12500 | 12500 | | 12500 |
| | iii) | பெட்ஷீட் (100 x ரூ.250) | | 25000 | 25000 | | 25000 | 25000 | | 25000 |
| | iv) | தலையணை (100 x ரூ.200) | | 20000 | 20000 | | 20000 | 20000 | | 20000 |
| 5 | புத்தகங்கள் வாங்குதல் ஏனைய செலவுகள் | | IFHRMS 2225-03-277-AA-33402 | 40000 | 40000 | IFHRMS 2225-03-277-BC-33402 | 40000 | 40000 | IFHRMS 2225-04-277-JB-33402 | 40000 |
| | | மொத்தம் | | 398050 | 423050 | | 398050 | 423050 | | 423050 |
| | | 2 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளின் மொத்த செலவினம் (1–மாணவர் ரூ.398050 + 1 –மாணவியர் ரூ. 423050) | | 821100 | | 2 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளின் மொத்த செலவினம் (1–மாணவர் ரூ.398050 + 1 –மாணவியர் ரூ. 423050) | 821100 | | 2 சிறுபான்மையினர் நல விடுதிகளின் மொத்த செலவினம் (2 மாணவியர் ) (ரூ.423050 x 2 ) | 846100 |
| | புதிதாக துவக்கப்படவுள்ள 6 விடுதிகளின் மொத்த தொடரா செலவினம் (பி.ந ரூ.821100 + மி.பி.ந ரூ. 821100 + சி.பா ரூ. 846100) | | | | | | | | | 2488300 |

| | பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளின் தொடர் மற்றும் தொடரா செலவின விவரம் | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | விடுதிகளின் விவரம் | தொடர் செலவினம் (ரூ.) | தொடரா செலவினம் (ரூ.) | மொத்தம் (ரூ.) |
| 1 | 2– பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | 7740648 | 821100 | 8561748 |
| 2 | 2– மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | 7740648 | 821100 | 8561748 |
| 3 | 2– சிறுபான்மையினர் நல விடுதிகள் | 7740648 | 846100 | 8586748 |
| | நிகர மொத்தம் | 23221944 | 2488300 | 25710244 |

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்